துறைமுகம் எழும்பூர் சட்டமன்ற தொகுதி பாக நிலை முகவர்கள் (BLA 2) ஆலோசனை கூட்டம், கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கினார். இந்த ஆலோசனை கூட்டத்தில் பகுதி செயலாளர்கள் எஸ்.ராஜசேகர் எஸ்.முரளி சொ.வேலு, வி.சுதாகர், சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் இரா.நரேந்திரன் துறைமுகம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பி.எம்.யாழினி, எழும்பூர் தொகுதி பார்வையாளர் மற்றும் கழக நிர்வாகிகள் BLA2 ஆகியோர் கலந்து கொண்டனர்.

ராணுவ ஒப்பந்தங்கள்!

முப்படைகளின் தலைமைத் தளபதி குற்றச்சாட்டு!

திறன்கள் குறித்து உண்மை விவரங்களை தெரிவிப்பதில்லை!

புதுடெல்லி, நவ. 17- ராணுவ ஒப்பந்தங்களை பெற்றுள்ள இந்திய நிறுவனங்கள், தரமான கருவிகளை உரிய நேரத்தில் வழங்குவதில்லை என முப்படைகளின் தலைமைத் தளபதி அனில் சவுகான் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற கருத்தரங்கம் ஒன்றில் ஜெனரல் அனில் சவுகான் கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர்,

பாதுகாப்புத்துறைக்கான சீர்திருத்தங்கள் ஒருவழிப் பாதை அல்ல என்றும், உள்நாட்டு நிறுனங்கள் தங்களின் திறன்கள் குறித்து உண்மையான விவரங்களை தெரிவிப்பதில்லை என்றும் கூறினார். இந்திய ராணுவத்துடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ள நிறுவனங்கள் குறித்த காலக்கெடுவிற்குள் கருவிகளை வழங்கவில்லை என்றால், அதனால் ஏற்படும் இழப்புகள் பெரிதாக இருக்கும் என்றும், இது போன்ற இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தும் நிறுவனங்கள் தேச பக்தியுடன் நடந்த கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பல இந்திய நிறு வனங்கள் தங்களின் திறன்கள் குறித்து உண்மைக்கு புறம்பான, மிகைப்படுத்தப்பட்ட விவரங்களை அளித்துள்ளதாக ராணுவத் தளபதி தன்னிடம் கூறியதாகவும் முப்படைகளின் தலைமைத் தளபதி அனில் சவுகான் தெரிவித்தார். முப்படை களின் அவசரக் கால கொள்முதல்களை விரைவுப டுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அனில் சவுகான் கூறினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 270 வது நாள்

திரு.வி.க.நகர் தெற்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, நவ.17- முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 270 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (16.11.2025), திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 73, நியூ பேரன்ஸ் ரோடு, சுமன் கார்ஸ் அருகில், 2) வட்டம் 75அ, எஸ். எஸ் புரம் பகுதி, முதல் தெரு, ஓட்டேரி, சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அற நிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ்செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன், மீனவரணி பகுதி அமைப்பாளர் தே.ரஞ்சித்குமார், வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.சதீஷ்குமார். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, S.முரளி, பெரம்பூர். R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு வருகை தரும்

துணை முதல்வருக்கு பிரம்மாண்ட வரவேற்பு அளித்திடுவோம் வாரீர்!

மாவட்ட கழக கூட்டத்தில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர், நவ.17; திருவள்ளூர் மத்திய மாவட்டம் திமுக சார்பில் மாநகர ஒன்றிய நகர பேரூர் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் ஆவடியில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார் அப்போது அமைச்சர் பேசுகையில், தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகள் நடந்து கொண்டிருப்பதை மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகச் செயலாளர்கள் இணைந்து வாக்குரிமை பெற்ற பதாகைகள் ஏந்தி மிகச் சிறப்பான முறையில் பிரம்மாண்ட மான வரவேற்பு அளிக்க வேண்டும்

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஏழை எளிய பொதுமக்கள் பயன்ப்படுவ வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் சிறப்பான முறையில் பொதுக் கூட்டங்கள் நடத்தி பிறந்தநாள் விழாவை சீரும் சிறப்போடு கொண்டாட வேண்டும் என தெரிவித்தார்

கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.விஜயசேகரன் உடல்நலக்குறைவால் காலமானார் என்பதை அறிந்ததும் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவரின் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி அவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ் செல்வன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

ரூ.747 கோடியில் மாணவ - மாணவியர்க்கு மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி!

சிவகங்கையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சிவகங்கை, நவ. 17 - கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நவம்பர் 14,15, , ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் இரண்டு நாட்கள் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார் . அதில் 14ம்தேதி காலை முதல் நாள் நிகழ்ச்சியாக சென்னையிலிருந்து திருச்சிக்கு விமானம் மூலம் துணை முதலமைச்சர்வருகை தந்தார். திருச்சிக்கு வருகை தந்த துணை முதல மைச்சரை சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வரவேற்றார்.பின்னர் அங்கிருந்து கார் மூலம் காரைக்குடி புறப்பட்டு சென்றார்.

காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை, பிற்பட்டோர் நலத்துறை சார்பில் மாணவ மாணவிகளுக்கு மிதிவண்டி வழங்கும் திட்டம் சிறந்த பள்ளிகளுக்கான விருது குழந்தைகள் தின விழா ஆகிய முப்பெரும் விழா மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் முன்னிலை வகித்தார் .

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி , சிவ.வி. மெய்யநாதன் எம்.எல் .ஏக்கள் எஸ்.மாங்குடி, திருமதி தமிழரசிரவிக்குமார், மேயர் எஸ். முத்துதுரை, துணை மேயர்நா. குணசேகரன், கல்வித்துறை செயலாளர் முனைவர் சந்திரமோகன், பிற்பட்டோர் நலத்துறை செயலாளர் சரவண வேல்ராஜ், பள்ளி கல்வித்துறை இயக்குனர்கள் கண்ணப்பன் மற்றும் இயக்குனர்கள் குப்புசாமி, நரேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி செல்வ சுரபி,அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் க. ரவி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்த கூட்டத்தில் மாநில அளவில் ரூபாய் 747 கோடி மதிப்பிலான 5 லட்சத்து 34,000 பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தினை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார் .

மேலும் குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு குழந்தைகளுக்கு வாழ்த்துக்களை கூறினார் .சிறந்த பள்ளிகளுக்கான விடுதலை வழங்கி சிறப்புரை யாற்றினார் .

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு .தென்னவன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலதண்டாயுத பாணி திட்ட இயக்குனர் அரவிந்த், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத், தமிழர் இயக்க பேரவை பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் தாசில்தார் ராஜா, தேவகோட்டை உதவி ஆட்சியர் ஆயுஸ் வெங்கட் பட், மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே .எஸ் . ரவி ஒன்றிய செயலாளர்கள் கே.ஆர்.ஆனந்த் சுப.சின்னதுரை, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் மருது அழகுராஜ், காரைக்குடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் நல்ல சேதுபதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான் மற்றும் பள்ளிக்கல்வித் துறை மாவட்ட பிற்பட்டோர் நலத்துறை அதிகாரிகள் அலுவலர்கள், மாணவர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். விழாவில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் குழந்தைகள் தின விழா வினை முன்னிட்டு அனுப்பி இருந்த வாழ்த்து செய்தியினை வாசித்தார்.

15ஆம் தேதி சனிக்கிழமை காலை காரைக்குடியில் இருந்து புறப்பட்டு கோவிலூரில் கழகக் கொடியினை ஏற்றி வைக்கிறார் . அதை தொடர்ந்து திருப்பத்தூர் சிங்கம்புணரி சாலையில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் தலைமையில் துணை முதலமைச்சர்உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து சிங்கம்புணரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேரூராட்சி மன்ற அலுவலக கட்டடங்களை திறந்து வைக்கிறார். 10 மணி அளவில் முன்னாள் அமைச்சர் செ.மாதவனால் கட்டப்பட்ட அண்ணா மன்றம் தற்போது புதுப்பிக்கப்பட்டு இரண்டு மாடி களுடன் கட்டப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் ,முன்னாள் அமைச்சர் செ.மாத வன்ஆகியோரது சிலைகளை துணை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

அதை தொடர்ந்து கிருங்கா கோட்டையில் சிறுகதை மன்னன் எஸ் .எஸ். தென்னரசு மார்பளவு வெங்கல சிலையினை திறந்து வைத்தார். அதை தொடர்ந்து மாலை 3 மணி அளவில் சிங்கம்புணரி பாரி வள்ளல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் அமைச்சர் செ.மாதவன் மணிமண்டபம் அவரது திருஉருவச்சிலையினை

திறந்து வைத்தார். அதை தொடர்ந்து மாவட்ட அளவிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் .

இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு தேர்தல் பயிற்சிப் பாசறை!

சென்னை, நவ. 17 - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களது வழிகாட்டுதலுடன், கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து, புதியதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சி பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், சென்னை வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட இராயபுரம் கிழக்கு, பெரம்பூர் வடக்கு, ஆர். கே.நகர் கிழக்குப் பகுதிகளுக்கான 2026 தேர்தல் பணிகள் குறித்த பயிற்சி பாசறைக் கூட்டம் மாவட்டச் செயலாளர்ஆர்.டி. சேகர் முன்னிலையில், நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், வருகின்ற 2026 தேர்தலை எப்படி எதிர்கொள்வது. அவற்றில் இளைஞர்களுக்கான பணிகள் என்ன என்று கழகச் செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஊடகவியலாளர்கள் செந்தில்வேல், இந்திரகுமார் தேரடி ஆகியோர் பேசினர்.

நிகழ்ச்சியின் இறுதியில், கலந்துகொண்ட புதிய நிர்வாகிகளுக்கு மினிட் நோட்புக் வழங்கப்பட்டது. சென்னை வடக்கு மாவட்ட அமைப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஜே.ஜே.எபினேசர், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் மூர்த்தி உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு!

திருவள்ளூர், நவ. 17; திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் கழக துணை பொதுச்செயலாளர் மண்டல பொறுப் பாளருமான ஆ.இராசா எம்.பி, தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் ஆலோசனைப்படி இன்று 17 112025 திங்கள் கிழமை மாலை 4 மணி அளவில் தண்டலம், பெரியபாளையம் ஊத்துக்கோட்டை நெடுஞ்சாலை அமைந்துள்ள ஹோட்டல் கிரே சூட் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது

இக் கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி வரவேற்பு உரை ஆற்றுகிறார்

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ இ.ஏ.பி.சிவாஜி, தொகுதி பார்வையாளர்கள் கவி.கணேசன், சுரேஷ்செல்வராஜ், மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எம்.எல். ரவி, எஸ்.ரமேஷ், மாநில நிர்வாகிகள் சி.எச். சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ராபர்ட்ராஜ் துரை, ஏ.கே.சுரேஷ் பொதுகுழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணி, பி. வெங்கடாசலபதி, பா.செ.குண சேகரன், ஏ.வி. ராமமூர்த்தி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் முன்னிலை வகிக்கிறார்கள்

எனவே ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், கி. வே.ஆனந்தகுமார், மு.மணிபாலன், ஆ.சத்தியவேல், ஜான் பொன்னுசாமி, ந.பரிமளம், நா.செல்வசேகரன், மு.முரளி தரன், ஆ.ராஜா, வே.ஆனந்த்குமார், ஏ.ஆர்.டி.உதயசூரியன், கா.சு.ஜெகதீசன், ஜி.ரவிக்குமார், இரா.அறிவழகன், அபிராமிகுமர வேல், பி.முத்து, க.சு.தமிழஉதயன் உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் முன்னாள் இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன்

கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டத்தின் பொருள் தமிழ்நாட்டின் துணை முதல்வரும் கழக இளைஞரணி செயலாளருமான இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது குறித்து மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிக்கையின் வாயிலாக தெரிவித்துக் கொண்டார்.

சென்னை கிழக்கு மாவட்டம்

திரு.வி.க.நகர் - வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிகளின் பாக நிலை முகவர்கள் (BLA 2) ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் -மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க நகர் - வில்லிவாக்கம், ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் பாக நிலை முகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம், மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில், 17.11.2025 திங்கட்கிழமை மாலை கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகிறது.

நாள்	நேரம்	சட்டமன்ற தொகுதி	இடம்
17.11.2025 (திங்கள்)	மாலை 4.00 மணி	திரு.வி.க.நகர் தொகுதி	**ஹேம்ராஜ் பவன்** குக்ஸ் சாலை, ஓட்டேரி, சென்னை–12.
	மாலை 5.000மணி	வில்லிவாக்கம் தொகுதி	WPA சௌந்தரபாண்டியன் பள்ளி வளாகம் ,அயன்புரம்

இக்கூட்டத்தில் திரு.வி.க நகர் - வில்லிவாக்கம் ஆகிய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள்/முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், பகுதிகழகசெயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழகச் செயலாளர்கள் பாக நிலை முகவர்கள் (BLA2) தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு

செயலாளர் – சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.